கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு 22/2021

வாதி தரப்பு சாட்சி –4 கதிர்வேல் என்பவரை திரு.ம.பெரியசாமி, இளநிலை உதவியாளர், அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 08.04.2026ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 முதல் 8 வரையான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்றதிலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. சாட்சி தற்போது அழைப்பாணை வரவில்லை என்று கூறுகிறார். வாதிகள் கேட்டுகொண்டதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். வாதிகள் என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். இவ்வழக்கின் வாதிகள் யார் யார் என்றால் பழனிசாமி, குமார், கோவிந்தன், நல்லுசாமி, வெள்ளைசாமி ஆகியோர்.

2. வாதிகளை தவிர நடுப்பண்ணையை சேர்ந்த மற்ற நபர்கள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். நான் எந்த பண்ணையை சேர்ந்தவர் என்றால் நடுப்பண்ணையை சேர்ந்தவர். நான் இவ்வழக்கின் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். 1 முதல் 4 பிரதிவாதிகள் எந்த பண்ணையை சேர்ந்தவர்கள் என்றால் பெரிய பண்ணையை சேர்ந்தவர்கள். 5 முதல் 8 பிரதிவாதிகள் சின்ன பண்ணையை சேர்ந்தவர்கள். 1 முதல் 4 பிரதிவாதிகளை தவிர பெரிய பண்ணையில் மற்ற நபர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். 5 முதல் 8 பிரதிவாதிகளை தவிர சின்ன பண்ணையில் மற்ற நபர்கள் உள்ளார்கள் என்றால் சரிதான்.

3. என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் கோவிலில் சாமி கும்பிட விடாமல் பிரதிவாதிகள் தடுத்ததால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சீலகாரியம்மன் மற்றும் குட்டகாளியம்மன் கோவில்கள் மூன்று பண்ணைக்கும் பொதுவான கோவில்கள் என்றால் சரிதான். மூன்று பண்ணைகளை தவிர வேறு

யாருக்கும் மேற்படி சீலகாரியம்மன் மற்றும் குட்டகாளியம்மன் கோவில்கள் பாத்தியம் இல்லை என்றால் சரிதான். முருகன் கோவில் எங்கள் பண்ணைக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்க ஆவணம் உள்ளதா என்றால் மின்வரி இரசீதுகள், புகைப்படம், கோவில் வரைபடம் உள்ளன.

4. மேற்படி கோவிலுக்கு மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் எனது தந்தை பெயரில் உள்ளது. 1ம் வாதி எனது அண்ணன் ஆவார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 இரசீது எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் 29.01.2021ம் தேதியில் வழங்கப்பட்டது. மேற்படி வா.சா.ஆ.8 இரசீது யார் பெயரில் உள்ளது என்றால் எனது தந்தை ராசு பெயரில் உள்ளது. மேற்படி வா.சா.ஆ.8 இரசீது ராசு பெயரில் தான் உள்ளது என்றும், கோவில் பெயரில் இல்லை என்றால் சரிதான். எனது தந்தை ராசு எப்போது இறந்தார் என்றால் சுமார் 20 வருடங்கள் இருக்கும்.

5. வருடம் நியாபகம் இல்லை. அவர் இறந்த பிறகு தான் மேற்படி வா.சா.ஆ.8 மின் இரசீது பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.8 இரசீது எனது வீட்டின் மின் வரி இரசீது என்றும், கோவிலுக்கு பாத்தியப்பட்ட மின் இணைப்பின் இரசீது இல்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் புகைப்படம் பி.சா.ஆ.1 ல் உள்ள கல்வெட்டு எந்த கோவிலில் உள்ள கல்வெட்டு என்றால் தாவா கோவிலான முருகன் கோவிலில் உள்ள கல்வெட்டு ஆகும். மேற்படி கல்வெட்டில் கண்டுள்ள வீ.கனகராஜ் மற்றும் வீராச்சாமி ஆகியோர் எந்த பண்ணையை சேர்ந்தவர்கள் என்றால் கனகராஜ் பெரிய பண்ணையையும், வீராச்சாமி சின்ன பண்ணையையும் சேர்ந்தவர் ஆவார்கள்.

6. மேற்படி கனகராஜ் மற்றும் வீராச்சாமி கோவிலுக்கு நன்கொடை வழங்கியதால் அவர்களது பெயர்கள் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா கோவில் மூன்று பண்ணைக்கும் பொதுவான கோவில் என்றும், அதனால் தான் மற்ற பெரிய மற்றும் சின்ன பண்ணையை சேர்ந்தவர்களின் பெயர்களும் மேற்படி கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் நன்கொடையாக செலுத்தியதால் அவர்களுக்கு கோவில் பாத்தியம் என்றாகிவிடாது. இவர்களை போல மற்ற நபர்களும் நன்கொடை செலுத்தியுள்ளார்கள்.

மேற்படி நபர்களுக்கு தனியாக கோவில்கள் உள்ளன.

7. தாவா கோவில் இடம் யார் பெயரில் உள்ளது என்றால் நத்தம் புறம்போக்கு நிலத்தில் உள்ளது. தாவா கோவில் இடமானது வருவாய் துறை ஆவணங்களில் மூன்று பண்ணைகளின் பெயர்களும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் தாவா கோவிலின் பூசாரி என்று சொல்லியுள்ள நிலையில் , வாதிகளால் இவ்வழக்கின் வழக்குரையிலோ, அவரது பிரமாண வாக்குமூலத்திலோ அதை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. 1ம் வாதி எனது உடன்பிறந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. நான் கோவில் பூசாரி என்பதை காண்பிக்க அறநிலைய துறையிலிருந்து எனக்கு சான்றிதழ் எதுவும் வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. பரம்பறையாக எனது குடும்பத்தினர் தான் பூசாரியாக தாவா கோவிலில் இருந்து வருகிறோம். மேற்படி விவரத்தையும் வாதிகளால் இவ்வழக்கின் வழக்குரையிலோ, அவர்களது பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், பொதுவாக குடும்பத்தில் மூத்த நபர் தான் பூசாரியாக நியமனம் செய்யப்படுவார் என்றும், எனது அண்ணன் 1ம் வாதி உள்ள நிலையில் நான் தாவா கோவிலில் பூசாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9. எனது பாட்டா இறந்த சமயத்தில் எனது அண்ணன் இராணுவத்தில் இருந்ததால் என்னை பூசாரியாக நியமனம் செய்தார்கள். நான் சொல்வது பொய் என்றும், எனது அண்ணன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள நிலையில் அவர் இராணுவத்தில் இருந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனது அண்ணன் 5 வருடங்களுக்கு முன்பு இராணுவத்திலிருந்து வந்ததாக நான் சொல்லும் நிலையில் தாவா கோவிலுக்கு அவர் தான் பூசாரியாக இருந்திருக்க முடியும் என்றும், நான் பூசாரியாக உள்ளதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

10. நான் தாவா கோவிலின் காவடி பூசாரியாகவும், குமார் என்கிற சிவக்குமார் வேல் பூசாரியாகவும், சாமியப்பன் வெள்ளிவேல் பூசாரியாகவும், வேலு இடும்பன் பூசாரியாகவும் இருப்பதாக சொல்லியுள்ள அனைத்தும்

தவறு என்றால் சரியல்ல. மேற்படி சாமியப்பன் என்பவர் மூன்று பண்ணைக்கும் சம்மந்தம் இல்லாதவர் என்றால் சரியல்ல. அவர் நடுப்பண்ணையை சேர்ந்தவர் ஆவார். மேற்படி சாமியப்பனின் தந்தை பெயர் தெரியுமா என்றால் தெரியும். நியாபகம் இல்லை. சாமியப்பன் எனது நடுப்பண்னை சேர்ந்தவர் இல்லை என்றும், அவர் பூசாரி இல்லை என்றும், அவரும் நானும் நடுப்பண்னை சேர்ந்த பூசாரியாக இருந்திருந்தால் அவரது தந்தை பெயர் எனக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல.

11. மேற்படி சிவக்குமார் கோவிலை திறந்து வைக்கும் பணியை செய்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்சமயம் கரூரில் வசித்து வருவதாலும், தாவா கோவிலுக்கு என்னால் செல்ல முடியாத நிலையில் உள்ளதால் மேற்படி சிவக்குமார் என்பவர் தான் கோவில்திறந்து வைக்கும் பணியையும் மற்ற பணிகளையும் செய்து வருகிறார். நான் கரூரில் வசித்து வருவதால் கோவிலுக்கும் எனக்கும் சம்மந்தம் இல்லை என்றும், எனது அண்ணனுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**1 முதல் 8 வரையான பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**